**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சோளிங்கர், வேலூர் மாவட்டம்,**
**முன்னிலை திருமதி. V. VANNAMALAR, M. L., PGDIPR, PGD. Crl. & Frn. Sc.**

**நீதித்துறை நடுவர், சோளிங்கர்.**

*2017ம் ஆண்டு மே மாதம் 10ம் நாள் புதன்கிழமை*
*வாழ்க்கை படித்தொகை வழக்கு எண். 01/2017*

K. ஜெயசுதா வயது 29, க/பெ. சரவணன்
இளவர், திவ்யா வயது 8, த/பெ. சரவணன்
இளவர், கிரன்குமார் வயது 5, த/பெ. சரவணன் ....மனுதாரர்கள்

**/எதிராக/**

சரவணன் வயது
த/பெ.நடராஜன் ....எதிர்மனுதாரர்

WEB COPY

**தீர்ப்புரை**

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் 03.02.2017ம் தேதியன்று பிரிவு 125 கு.வி.மு.சவின் கீழ் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.தமிழ்செல்வன் மற்றும் திரு.பிரபு அவர்கள் ஆஜர் ஆகியும் எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் முன்னிலையாகாத நிலையில் மனுதாரர்கள் தரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

**1) 1ம் மனுதாரர் தனக்காகவும் தன்னுடைய இளவர் பிள்ளைகளான 2ம் மற்றும் 3ம் மனுதாரருக்காகவும் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் வழி சோமசமுத்திரம் கிராமம், நெ.123, சின்னத்தெரு, என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி கடந்த 31.10.2008ம் ஆண்டு ஆந்திர மாநிலம், சித்தூர் அடுத்து உள்ள தொட்டிப்பள்ளியில்

திருமதி. காந்திமதி குமாரசாமி முதலியார் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றதாகவும், அந்த திருமணத்தின் பலனாக 05.09.2009ம் தேதி 2ம் மனுதாரரான திவ்யா என்ற பெண் குழந்தையும், 03.11.2011ம் தேதி 3ம் மனுதாரரான கிரண்குமார் என்ற ஆண் குழந்தையும் பிறந்ததாகவும், தற்போது இரண்டு குழந்தைகளும் 1ம் மனுதாரரின் பராமரிப்பில் இருந்துவருவதாகவும், 1ம் மனுதாரர் கூறியுள்ளார். மேலும் 1ம் மனுதாரர் தனது மனுவில் கூறுகையில், எதிர் மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் வரதட்சணை கேட்டதற்கிணங்க தன் திருமணத்தின் போது தனது தாயார் தனக்கு 8 சவரண் நகைகள், ரூ.1,00,000/- மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் ரூ. 50,000/- பணமாக கொடுத்ததாகவும், திருமணம் முடிந்து ஒரு வார காலமே தான் நல்ல முறையில் எதிர்மனுதாரருடன் வாழ்ந்ததாகவும், பிறகு எதிர்மனுதாரர் அவரது தாய் மற்றும் சகோதரியுடன் இணைந்து கொண்டு தன்னை அசிங்கமாக பேசி திட்டியதாகவும், வரதட்சணை வாங்கிவரும்படி கொடுமைபடுத்தியதாகவும், 1ம் மனுதாரர் தன்னுடைய தாய் வீட்டில் உள்ளவர்கள் ஏழ்மையான நிலையில் உள்ளதால் வரதட்சணை அளிக்க இயலாது என்று கெஞ்சியதாகவும், எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் தொடர்ந்து தன்னை கொடுமைபடுத்தி வந்ததாகவும், திருமண வாழ்வில் தன்னை இரக்கமில்லாமல் குடித்துவிட்டு வந்து அடித்து துன்புறுத்தியதாகவும், 1ம் மனுதாரர் அதை பொறுத்துக்கொண்டு வாழ்ந்ததாகவும், எனினும் எதிர்மனுதாரர் மீண்டும், மீண்டும் துன்புறுத்தியதாகவும், தனது தாயார் எதிர்மனுதாரரிடமும் அவரது குடும்பத்தாரிடமும் சமாதானம் பேச முயற்சித்ததாகவும் எதுவும் பலனளிக்கவில்லை என்றும், 2012ம் வருடம் அக்டோபர் மாதம் எதிர்மனுதாரர் தன்னை தாய் வீட்டிற்கு துரத்திவிட்டதாகவும், தனது தாயார் 20.08.2014ம் தேதி எதிர்மனுதாரருடன் சமாதானம் பேசி தன்னையும் தனது குழந்தைகளையும் எதிர்மனுதாரருடன் சேர்த்து வைத்ததாகவும், 1ம் மனுதாரரின் குழந்தைகளுக்கு காதனி விழா ஏற்பாடு செய்ததாகவும், அதற்கு பணம் வாங்கிவரும்படி எதிர்மனுதாரர் தன்னை கடுமையாக தாக்கியதாகவும்,

WEB COPY

இதற்கிடையில் எதிர்மனுதாரர் லட்சுமி என்ற பெண்ணுடன் கள்ள உறவு வைத்துள்ளதை அறிந்து சித்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தான் புகார் அளித்ததாகவும் பிறகு 12.10.2014ம் தேதி எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் தன்னை கடுமையாக தாக்கி தன்னை தனது குழந்தைகளுடன் தனது தாய் வீட்டுக்கு துரத்தி விட்டதாகவும், 1ம் மனுதாரர் தனது இரண்டு குழந்தைகளை கஷ்டப்பட்டு தனது தாய் வீட்டில் பராமரித்து வருவதாகவும், 1ம் மனுதாரரின் மகள் திவ்யா மூன்றாம் வகுப்பும், மகன் கிரண்குமார் U.K.G வகுப்பும் தனியார் பள்ளியில் படித்து வருவதாகவும், தனது தந்தை இறந்து விட்டதாகவும், தனது விதவை தாயார் எந்த வேலையுமில்லாமல் அவரையே பராமரிக்க இயலாத நிலையில் உள்ளதாகவும்; 1ம் மனுதாரர் 2ம் மற்றும் 3ம் மனுதாரர்களுடன் தனது விதவை தாயாருடன் இருப்பதாகவும், தன்னையும் தனது பிள்ளைகளையும் பராமரித்து கொள்ள இயலாமல் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரர் தனியாக வாகன டிராவல்ஸ் தொழில் செய்துக்கொண்டு மாதம் ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) சம்பாதிப்பதாகவும், ரூ.30,00,000/-(ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மதிப்பிலான அசையா சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு உள்ளதாகவும் 1ம் மனுதாரரின் மாமியார் ஆந்திர மாநில அரசின் ஓய்வூதியமான மாதம் ரூ. 15,000/- பெற்று வருவதாகவும், தன்னுடைய வயதான விதவை தாயுடன் எந்த வருமானமும் இன்றி வாழ்ந்து கொண்டிருப்பதாகவும், தனது வாழ்வாதாரத்திற்கு மாதம் ரூ.10,000/- தேவைபடுவதாகவும், தனது மகள் மற்றும் மகன் ஆகியோருக்கு மாதம் ரூ.10,000/- உணவு, கல்வி செலவினங்களுக்கு தேவைப்படுவதாகவும், மேலும் வருடத்திற்கு ரூ.2,00,000/- மனுதாரர்களின் துணி மணி செலவுகளுக்கும், மருத்துவ மற்றும் இதர செலவுகளுக்குமாக தேவைபடுவதாகவும், இதனை கொடுக்க எதிர்மனுதாரர் கடமைபட்டவர் என்று கூறி மேற்படி மனுவை மனுதாராகள் பிரிவு 125 கு.வி.மு.சவின் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.

WEB COPY

2) எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்கண்ட புகார் மனுவிற்கு பதில் அளிக்குமாறு அறிவிப்பு அனுப்பியும் எதிர்மனுதாரர் இதுநாள்வரை ஆஜராகவில்லை. எனவே அவர் தோன்றா தரப்பினராக கருதப்பட்டார்.

3) 1ம் மனுதாரர் தன்னுடைய சாட்சியத்தில் தான் மனுவில் கூறிய அனைத்து சங்கதிகளையும் மீண்டும் எடுத்துரைத்துள்ளார். அவர் தனது திருமணபத்திரிக்கையை தனது தரப்பு சான்றாவணம் 1 ஆகவும், திருமண புகைப்படத்தை தனது தரப்பு சான்றாவணம் 2 ஆகவும், மூத்த மகள் திவ்யா பிறப்பு சான்றிதழின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகலை தனது தரப்பு சான்றாவணம் 3 ஆகவும், இளைய மகன் கிரன்குமார் பிறப்பு சான்றிதழின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகலை தனது தரப்பு சான்றாவணம் 4 ஆகவும் குறியீடு செய்துள்ளார். 1ம் மனுதாரர் மேலும் தனது சாட்சியத்தில் தனக்கும் எதிர் மனுதாரருக்கும் திருமணம் முடிந்து ஒரு வருட காலமே தான் நல்ல முறையில் வாழ்ந்ததாகவும் எதிர் மனுதாரர் பிறகு அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து தன்னை கொடுமைபடுத்தி வந்ததாகவும், தன்னை இரக்கம் இல்லாமல் குடித்துவிட்டு வந்து அடித்து துன்புருத்தியதாகவும், தன்னை 2012ம் வருடம் அக்டோபர் மாதம் தனது தாய் வீட்டிற்கு துரத்தி விட்டதாகவும் பிறகு 20.08.2014 அன்று தனது தாயார் சமாதானம் செய்து தன்னையும் தனது குழந்தைகளையும் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழவைத்ததாகவும், எனினும் 12.10.2014ம் தேதி எதிர் மனுதாரரும் அவரது தாயாரும் தன்னை கடுமையாக தாக்கி தன்னையும் தனது 2 குழந்தைகளான 2ம் மனுதாரர் மற்றும் 3ம் மனுதாரர்களுடன் தன்னை வீட்டை விட்டு துரத்தி விட்டதாகவும் தான் தனது விதவை தாயாருடன் தன்னையும் தனது குழந்தைகளையும் பராமரித்துக்கொள்ள இயலாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது சாட்சியத்தில் தனது கணவருக்கு மாதாந்திர வருமானம் ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வருவதாகவும் மேலும் ரூ.30,00,000/-(ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மதிக்கத்தக்க அசையா

WEB COPY

சொத்து தனது கணவருக்கு இருப்பதாகவும், தனது கணவரின் தாயாரான தனது மாமியார் ஆந்திர மாநில அரசின் ஓய்வூதிய தொகையாக மாதம் ரூ.15,000/- பெருவதாகவும் கூறியுள்ளார்.

4) எதிர்மனுதாரர் தொடர்ந்து இந்த வழக்கிற்காக இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இந்நிலையில் ஆய்விற்குரியது யாதெனில் மனுதாரர்கள் வாழ்க்கை பொருளுதவி எதிர்மனுதாரரிடமிருந்து பெறுவதற்கு தகுதியானவரா? இல்லையா? தகுதி உண்டெனில் மாதம் ஒன்றிற்கு எவ்வளவு தொகை? எந்த தேதியிலிருந்து வழங்க ஆணையிடலாம்? என்பதேயாகும்.

5) மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வழக்கு கோப்புகள் மற்றும் வாதங்களின் அடிப்படையிலும் 1ம் மனுதாரர் எதிர்மனுதாரின் சட்டப்படியான மனைவி என்றும், 2ம் மற்றும் 3ம் மனுதாரர்கள் 1ம் மனுதாரருக்கும் எதிரிமனுதாரருக்கும் பிறந்த பிள்ளைகள் என்றும், எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை துன்புறுத்தி வந்ததும், தற்போது மனுதாரர்கள் அவருடைய தாய் வீட்டில் வசித்து வருவதும், தன்னை பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ளார்கள் என்பதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பிரிவு 125 கு.வி.மு.சவின் கீழ் ஒருவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் தன்னைதானே பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் அவரைக்காப்பாற்றி அவருக்கு தேவையான பொருளுதவிகளை வழங்குவதென்பது ஒரு கணவன்/தந்தையின் தலையாய கடமையாகும். எதிர்மனுதாரிடம் இருந்து, மனுதாரர்கள் வாழ்க்கைப்பொருளுதவி பெற உரிமையுடையவர்கள் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மனுதாரர்கள் அன்றாட தேவைகளுக்கு மாதாந்தர பராமரிப்பு தொகையை கோரும் பொழுது, ஒவ்வொரு ஆண்டுக்கும் தனியாக பராமரிப்பு தொகை வழங்கப்பட கோருவது நியாயமற்றதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

முடிவில்

மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

எதிர்மனுதாரர் இந்த வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிறகும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தை மறுக்கவில்லை. எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் 1ம் மனுதாரரின் சாட்சியம் ஏற்கப்பட்டு ஒரு தலைபட்சமாக உத்தரவு பகரப்படுகிறது. 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.2000/- பராமரிப்பு தொகையாகவும், ரூ.1000/- இதர செலவுகளான துணி மணி மற்றும் மருத்துவ செலவுகளுக்கும் ஆகமொத்தம் மாதம் ஒன்றிக்கு ரூ.3000/- வாழ்க்கை பொருளுதவியாகவும் 2ம் மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு தலா ரூ.2000/- கல்வி, உணவு மற்றும் இதர செலவுகளுக்கும் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அத்தொகையை பிரதிமாதம் முதல் தேதியிலிருந்து 5ம் தேதிக்குள் வழங்கவேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கிறது. மாதாந்தர பராமரிப்பு தொகை வழங்கப்பட உத்தரவிடப்படுவதால் வருடாந்தர பராமரிப்பு தொகைக்கான கோரிக்கை மறுக்கப்படுகிறது. மேலும் மேற்குறிப்பிட்ட இந்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர தொகையான மொத்தம் ரூ.7000/-ஐ இவ்வழக்கு மனுதாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இந்நாள்வரையிலான நிலுவைத்தொகையை கணக்கிட்டு இந்நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர் வழங்கிட வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

WEB COPY

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2017ம் ஆண்டு மே மாதம் 10ம் நாள், புதன்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
சோளிங்கர்.

**<u>பின்சேர்க்கை</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

*ம.த.சா. 1. ஜெயசுதா*

**<u>மனுதாரரின் தரப்பு சான்றாவணங்கள்</u>**

*ம.த.சா.ஆ.1. திருமண பத்திரிக்கை*

*ம.த.சா.ஆ.2. திருமண புகைப்படம்*

*ம.த.சா.ஆ.3. மகள் திவ்யா-வின் பிறப்பு சான்றிதழின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகல்*

*ம.த.சா.ஆ.4. மகன் கிரண்குமார்-ன் பிறப்பு சான்றிதழின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகல்*

WEB COPY

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், மற்றும் சான்றாவணங்கள் இல்லை</u>**

*நீதித்துறை நடுவர்,*
*சோளிங்கர்.*

WEB COPY